## சிறுபாணாற்றுப்படையில் நல்லியக்கோடனின் பண்புகள்

**முனைவர் அ. அசோகன்**

தமிழ்த்துறை, உதவிப்பேராசிரியர், அன்னை கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கோவிலாச்சேரி, கும்பகோணம்.

### முன்னுரை

பத்துப்பாட்டுள் ஆற்றுப்படை நூல்களில் ஒன்று சிறுபாணாற்றுப்படை.

"கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்

ஆற்றிடைக் காட்சி உறழத் தோன்றிப்

பெற்ற பெருவளம் பெறாஅர்க்கு அறிவுறீஇச்

சென்று பயன் எதிர்ச் சொன்ன பக்கமும்"

எனத் தொல்காப்பியம் ஆற்றுப்படைக்கு இலக்கணம் கூறியுள்ளது.

கூத்தர், பாணர், பொருநர், விறலியர் ஆகியோர் வழிச்செல்லும் காட்சிகளைக் கூறித் தான் பரிசு பெற்ற செய்தியை பரிசு பெறாமல் வறுமையில் இருப்போருக்குக் கூறி அவர்களையும் வழிப்படுத்துவது ஆற்றுப்படை ஆகும். ஆறு – வழி ஆற்றுப்படை – வழிப்படுத்துவது ஆகும்.

269 அடிகளைக் கொண்ட சிறுபாணாற்றுப்படையின் ஆசிரியர் இடைக்கழி நாட்டு நல்லூர் நத்தத்தனார் ஆவார். பரிசு பெற்ற பாணன், ஆற்றுப்படுத்துவதாக இந்நூல் அமைந்துள்ளது.

ஒய்மா நாட்டு நல்லியக்கோடனின் கொடைத்திறத்தினை வறுமையில் வாடிய பாணன் அவனிடம் பெற்ற பரிசிலின் வழி மற்றொரு பாணனுக்கு எடுத்துரைப்பதாக நல்லூர் நத்தத்தனார் என்னும் புலவர் பாடியுள்ளார். அவர் நல்லியக்கோடனின் நாட்டிற்குச் செல்லும் வழியினைக் குறிப்பிடும் பொழுது எயிற்பட்டினம், வேலூர், ஆமூர் ஆகிய நிலப்பகுதிகளின் வளத்தினை எடுத்துரைத்து, நல்லியக்கோடனின் அரண்மனையில் அம்மன்னனைப் பலரும் புகழ்ந்து உரைக்கும் போற்றுதலின்மூலம் நல்லியக்கோடனின் பண்புகளையும் எடுத்துரைத்துள்ளார்.

### பாடல்சான்ற நெய்தல் நெடுவழி

நல்லியக்கோடனிடம் பரிசில் பெற்று வந்த பாணன் வழியில் கண்ட பாணர் கூட்டத்தினைப் பார்த்து, நீங்களும் நல்லியக்கோடனிடம் பரிசில் பெற விரும்பிச் சுற்றத்துடன் செல்லுங்கள். வழியில் கடற்கரையிடத்து தாழை, அன்னப்பறவைகள் போலப் பூத்திருக்கும். செருந்தி மலர்கள் பொன்னை மருளச் செய்யும். முண்டகம் எனப்படும் தாமரை கதிர்விடும் நீலமணி போலப் உப்பங்கழி சூழ்ந்த ஊர்களை உடைய எயிற்பட்டினம் என்ற ஊர் உண்டு. அங்கு அலைகள் கொண்டு வந்து சேர்த்த அகிற்கட்டைகளால் நெருப்பை எரித்துக் காய்ச்சிய கள்ளின் தெளிவைப் பரதவர் எடுத்து வந்து உங்கள் வாயில் வைத்து உண்ணச் செய்வர். கிடங்கில் கோமானாகிய நல்லியக்கோடனைப் பாடித் தாளத்திற்கேற்ப ஆடிய உமது மகளிருடன் உலர வைத்துச் சுடப்பட்ட சூழல் என்ற மீனை மனைத்தோறும் தந்து உபசரிப்பர்.

"அறல் குழல் தூங்கியவரொடு

வறல்குழல் சூட்டின், வயின்வயின் பெறுகுவீர்"

### விறல் போல் வென்றி வேலூர்

முல்லை நிலத்திலே கார்காலம் தொடங்கி உள்ளது. அவரைச் செடி பவழங்களைத் தொடுத்தது போலப் பூத்திருக்கிறது. காயா மரங்கள் மயிலின் கழுத்துப் போலப் பூத்துள்ளன. முசுண்டைக்கொடி கொட்டம் என்ற பணங்குருத்தால் செய்த சிறுபெட்டி நிறைய மலர்கள் உள்ளன போல் மலர்ந்துள்ளது. காந்தள் செடி மகளிரின் அழகிய கை விரல்கள் போலப் பூத்துள்ளன. கொல்லையின் வழிகளில் அழகிய சிவந்த இந்திரகோபப் பூச்சிகள் ஊர்ந்து செல்கின்றன.

தலைவரின் வருகையை எதிர்நோக்கி ஆற்றி இருத்தலாகிய உரிப்பொருள் அமைந்த முல்லைக்கொடி படர்ந்த அழகிய காட்டில் சூரியன் மேற்குத் திசையில் சென்று மறைய அந்திக் காலமானதைக் கண்டு முருகன் கையிலுள்ள வேலின் நுனி போலப் பூத்த கேணியிடத்து உண்டாகிய வெற்றியை உடைய வேலாலே வெற்றி பெற்ற வேலூரை நீங்கள் அடைவீர்கள். அங்கு வெப்பம் மிகுந்த குடிசையில் வாழும் எயினர் குலமகளிர் சமைத்த இனிய புளியுடன் கூடிய சோற்றை ஆமான் சூட்டு இறைச்சியோடு உபசரித்து அளிப்பர்.

"எயிற்றியர் அட்ட இன்புளி வெஞ்சோறு

தேமா மேனிச் சில்வளை ஆமொடு

ஆமான் சூட்டின் அமைவரப் பெறுகுவிர்"

**அந்தணர் அருகா அருங்கடி வியன்நகர்**

மாலையைக் கட்டினாற் போன்று விளங்கும் தொடுத்து பூக்களை உடைய சிறிய கிளைகளையும் குட்டையான அடிமரத்தையும் உடைய காஞ்சி மரத்துக் கிளையில் காலையில் ஏறி மிகுதியான ஆழத்தை உடைய நீரில் உள்ள மீன்களைப் பிடிப்பதற்காக நீண்ட நேரம் காத்திருக்கும் சிச்சிலிப்பறவை. அக்குளத்திலுள்ள கயல்மீன்களை முழுகி எடுத்து, பொன்நிறமான அலகினையும் உடையது. நீலநிறமுடைய சிச்சிலிப் பறவையின் நகத்தால் கிழிக்கப்பட்ட வெண்தாமரை மலரை நீலநிறத்தையும் சிவந்த கண்களையும் உடைய வண்டுகள் வரிசையாகச் சென்று சேர்வது, திங்களைக் கவரும் கரும்பாம்பு போலத் தோன்றுகிறது.

"மருதம் சான்ற மருதத் தண்பணை

அந்தணர் அருகா, அருங்கடி வியன்நகர்

அம்தண் கிடங்கின் அவன் ஆமூர் எய்தின்"

மருதநிலத்தில் குளிர்ந்த வயல்களைக் கொண்டதும், அந்தணர் நிறைந்துள்ளதும், அரிய காவலை உடையதும் அகன்ற இடத்தையும் குளிர்ந்த அகழியையும் கொண்டதுமான ஊர் நல்லியக்கோடனின் பிள்ளைகளைப் போல உம்மை உபசரித்துக் குற்றிச் சமைக்கப்பட்ட அரிசியில் ஆக்கிய கட்டியான வெள்ளிய சோற்றை நண்டும் பீர்க்கங்காயும் கலந்த கலவையுடன் உண்ணக் கொடுப்பர்.

**நல்லியக்கோடனின் அரண்மனை வாயில்**

நல்லியக்கோடன் அரண்மனை வாயிலானது பொருநருக்கும், புலவருக்கும், அருமறை ஓதும் நாவினை உடைய அந்தணருக்கும் எக்காலத்திலும் அடைக்கப்படாததாகவும், பகைவர் அணுகமுடியாததாகவும் மாமேரு மலையானது கண் விழித்துப் பார்ப்பதைப் போன்று விளங்கியது.

"பொருநர்க்கு ஆயினும் புலவர்க்கு ஆயினும்

அருமறை நாவின் அந்தணருக்கு ஆயினும்

கடவுள் மால் வரைகண் விடுத்தன்ன

அடையா வாயில் அவன் அருங்கடை குறுகி"

**நல்லியக்கோடனின் பண்புகள்**

நல்லியக்கோடனது அரண்மனையின் நுழைவாயிலை அணுகிச் சென்றால் அங்கு அவனுடைய பண்புகளைப் பலரும் பலவாறு புகழ்ந்து பேசுகின்றனர். எக்காலமும் மன்னனுடன் நெருங்கி இருக்கின்ற பல கலைகளையும் உணர்ந்த சான்றோர் அவனுடைய செய்ந்நன்றி அறிதலாகிய குணத்தையும் சிற்றினத்தவரோடு சேராத தன்மையையும் இன்முகம் உடைமையும் இனியவன் ஆதலையும் புகழ்வர்.

**வீரர்கள் போற்றுதல்**

வாள் வலிமையில் சிறந்த போர் வீரர்கள் நல்லியக்கோடனின் வீரத்தைக் கண்டு அஞ்சி, மன்னனுடைய திருவடியில் வீழ்ந்து வணங்குவர். அவ்வாறு வணங்குவோருக்கு அருள் செய்யும் பெருமையையும், கொடிய கோபம் இல்லாமையுமு் உடையவள். பகைவனின் படையிலே புகுந்து அப்படையினையும் அவர்களின் அணியினையும் கலைப்பதும், அப்படைகள் தளர்ச்சியுறும் பொழுது அதன் பின் சென்று பகைவரை ஓங்கவிடாமல் தடுத்துத் தன் படைகளைத் தாங்குதலையும் மன்னனின் பண்புகளாகப் புகழ்வர்.

**பெண்கள் போற்றுதல்**

நல்லியக்கோடன் தன்நெஞ்சு கருதிய இன்பத்தைக் குறைவின்றி முடிக்கவல்ல தன்மையைக் கொண்டவன். இருப்பினும் மகளிர் வசப்படாத பண்பினை உடையதோடு அம்மகளிருக்குப் பாதுகாவலாகவும் விளங்கக் கூடியவன். இவ்வாறு செவ்வரி பொருந்திய கண்களை உடைய மகளிர் புகழ்ந்தனர்.

**பரிசிலர் போற்றுதல்**

"அறிவு மடம்படுதலும் அறிவு நன்கு உடைமையும்

வரிசை அறிதலும் வரையாது கொடுத்தலும்

பரிசில் வாழ்க்கைப் பரிசிலர் ஏத்த

பல்மீன் நடுவண் பால்மதி போல

இன்நகை ஆயமொடு இருந்தோர்"

நல்லியக்கோடன் தான் கூறுகின்றவற்றை அறியும் அறிவில்லாதாரிடத்து தானும் அறியாமை உடையவன் போன்று இருந்தாலும், தன்னைப் போல அறிவுடையாரிடத்துத் தான் அவரினும் மிகுந்த அறிவுடையவனாய் இருத்தலும், பரிசிலரின் தரத்தை அறிந்து கொடுத்தலும், கலவி அறிவற்ற பரிசிலருக்கு அவர்கள் அளவிற்கு ஏற்றவற்றைக் கொடுத்தலையும் கூறி பரிசிலர் (பரிசு பெற்றோர்) புகழ்வர். அத்தகைய பரிசில்களை வாரி வழங்கும், பண்பிலே சிறந்த நல்லியக்கோடன் என்னும் மன்னன் விண்ணில் விளங்கும் விண்மீன்களின் நடுவிலெ விளங்கும் ஒளியுடைய முழுமதி போல இனிய மகிழ்ச்சியோடு உள்ள பரிசிலர்களுக்கு இடையே அவையிலே கொலு வீற்றிருப்பான்.

**முடிவுரை**

இவ்வாறு எயிற்பட்டினம், வேலூர், ஆமூர் நிலப்பகுதிகளின் வளமையையும் நல்லியக்கோடனின் அரண்மனை, அரண்மனையில் நல்லியக்கோடன் வீற்றிருத்தல், அரண்மனையில் வீரர்கள், பெண்கள், பரிசிலர் புகழ்தல் போன்றவற்றின் மூலம் அம்மன்னனின் பண்புகளை அறிய முடிகின்றது. இன்முகம் கொண்டவன், பகைவருக்கும் அருளும் கொடைகுணம் உடையவன், பகைவருக்கும் பகைவராக விளங்குபவன், நற்குணம் கொண்ட வள்ளல், பெண்களின் பாதுகாவலன் என்று நல்லியக்கோடன் பண்புகள் எடுத்துரைக்கப் பெற்றுள்ளன.